செ.வெ.எண்:04 நாள்:03.12.2018

**கரூர் மாவட்டம்**

**கஜா புயலால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள பொதுமக்களுக்கு உதவிடும் வகையில் கரூர் மாவட்டம் பொதுமக்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்கள் சார்பாக இதுவரை ரூ.8,54,224 மதிப்பில் ரொக்கம் மற்றும் காசோலைகளாக பெற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதிக்கு வழங்கப்பட்டுள்ளது-மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (03.12.2018) நடைபெற்றது.

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, கணவனால் கைவிடப்பட்டோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, வீட்டுமனைப்பட்டா, வேலைவாய்ப்பு, காவல்துறை நடவடிக்கை, புதிய குடும்ப அட்டை, கல்விக்கடன், தொழில் கடன், குடிநீர் வசதி, சாலை வசதி, அடிப்படை வசதிகள் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து மொத்தம் 250 மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்றுக்கொண்டு பரிசீலித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் முகாம் மனுக்கள் மீது தனிக்கவனம் செலுத்தி உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் மனுநீதி நாள் முகாம் மனுக்கள், மாவட்ட உயர் அலுவலர்களின் மனுநீதி நாள் முகாம் மனுக்கள், மக்களைத்தேடி வருவாய்த்துறை அம்மா திட்ட மக்கள் குறை தீர்க்கும் முகாமில் பெறப்பட்ட மனுக்கள் ஆகியவற்றின் மீது உரிய விசாரணை மேற்கொண்டு காலதாமதம் இல்லாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், கஜா புயலால் பாதித்த மக்களுக்கு பயன்படும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதிக்கு செல்வன் ச.அதீத் என்ற மாணவன் தனது உண்டியலில் சேகரித்த ரூ.850-ம், அரவக்குறிச்சியை சேர்ந்த தேங்காய் வியாபாரி திரு.பிச்சைமுத்து ரூ.1,00,000-ம், கிருஷ்ணராயபுரம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.காமராஜ் அவர்கள் ரூ.20,000-ம் இன்று (03.12.2018) வழங்கினார்கள். வழங்கியுள்ளார்கள். இத்துடன் கரூர் மாவட்டத்தை சேர்ந்த பொதுமக்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களை சேர்ந்தவர்கள் ரூ.8,54,224 வழங்கியுள்ளார்கள்.

இவ்வாறு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மக்கள் குறை தீர்க்கும் தனித்துணை ஆட்சியர் திருமதி கே.மீனாட்சி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நல அலுவலர் திரு.த.குமரேசன், மாவட்ட அதி திராவிடர் நல அலுவலர் திருமதி லீலாவதி மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**